8

சென்ஸாரும் குடும்பப் படமும்

வணக்கம் தெரிவித்து ஒருவர் என் முன் வந்து நின்றார். குப்புற வீழ்த்திவிடும் அளவுக்கு அவருடைய நெற்றியில் விபூதியும் குங்குமமும் இருந்தது.

"உக்காந்திடுங்க, உக்காந்திடுங்க," என்றேன்.

அவர் நின்றபடியே, "நாளைக்கு நம்ம படத்தை ஆர்.சி.லே பாக்கறீங்க" என்றார்.

திரைப்படங்களின் மறுதணிக்கைக்கு ஆர்.சி. அல்லது 'ரிவைஸிங் கமிட்டி' என்று பெயர்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்!" என்று கேட்டேன். ஏனென்றால் எனக்குத் தெரியாது.

"தமிழ்க்காரங்க இருக்கிறது ஏழெட்டுப் பேரு. நாலு பேர் முதல்லே பார்த்தாங்க. இப்போ பாக்கி நீங்கதானே பார்க்கணும்?"

நான் மௌனமாக நின்றேன்.

"படம் நல்ல ஃபாமிலி சப்ஜெக்ட்டுங்க. ஆனா முதல் கமிட்டிலே 'ஏ' கொடுத்துட்டாங்க."

"இதைப் பாருங்க, பழி வாங்கறதுக்குன்னு சொந்த மச்சினியை அவ கல்யாணத்துக்கு முதல் நாள் அவ அக்கா புருஷன் பலவந்தமா நிர்வாணமாக்கி வேடிக்கை பார்க்கிறான். அந்தப் பொண்ணு தற்கொலை பண்ணிக்கிறா. அந்த படத்துக்கு ஏன் 'யூ' கொடுக்கலேன்னு இன்னிக்கும் அந்த டைரக்டர் எங்களைத் திட்டிண்டு அலையறாரு. உங்க படம் எப்படியோ?"

"நம்ம படத்திலே நிர்வாணம் கிடையாதுங்க. முழுக்க ஃபாமிலி சப்ஜெக்ட். ஜனசமூகத்துக்குத் தொண்டு செய்யணும்னு இந்தப்

படத்தை எடுத்தேங்க. அதுக்குப் போய் 'ஏ' கொடுத்து வெட்டவும் சொல்றாங்க."

"என்ன தொண்டு?"

"நீங்கதான் பாக்கப் போறீங்களே. முழுக்க ஃபாமிலி சப் ஜெக்ட். நீங்க எப்படியாலும் 'யூ' கொடுத்துட்டாப் போதும்."

அந்தச் சிவப்பழம் சி.பி.ஐ. தலைவராக இருக்கத் தகுதி பெற்வர். அவர் என்னை வழிமறித்த அடுத்த நாள் தணிக் கைக்கு நான் படம் பார்க்க வேண்டியிருந்தது. அதுவும் ஆர்.சி.!

அவர் கூறியதில் உண்மை இல்லாமல் போகவில்லை. படத்தில் நிர்வாணம் கிடையாது. மூன்று பெண்கள். மூன்று முரடர்கள் அவர்களை மூன்று முறை பலாத்காரம் செய்வது விரிவாகக் காட்டப்பட்டிருந்தது. அதிலுள்ள குடும்ப அம்சம் அந்த மூன்று பெண்களும் சகோதரிகள்.

"மறுபடி 'ஏ' கொடுத்து இப்படி வெட்டவும் சொல்றீங்களே!" என்று அவர் கோபித்துக் கொண்டார்.

தேவையற்ற கோபம். ஐந்தாம் வகுப்புப் படிக்கும் என் மகன் விடுமுறைக்காகக் கிராமத்தில் உள்ள அவன் பெரியப்பா வீட்டுக்குப் போனான். சிறியவர்கள் பெரியவர்களாக எல்லாம் ஒரு டூரிங் சினிமாவுக்குப் போயிருக்கிறார்கள். படம் சிவப் பழத்தின் ஃபாமிலி சப்ஜெக்ட்.

என் மகன் விவரித்ததிலிருந்து ஒன்று தெரிந்தது. எந்தக் காட்சியும் வெட்டப்படாமல் பரிபூரணமாக இருந்திருக்கிறது.

இது ஒரு கற்பனைக் கதை என்றால் நம்ப மாட்டீர்கள்.

1982